

# சாதனா ஆடுறா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழலைகள் இசைப்பா அரங்கு -02- பதிவுகள்

தாயின் மடியில் தவழ்ந்து பூமித்தாயின் மடியில் நடைபயின்று மழலைத்தமிழில் மகிழ்ந்து ஆடுவதும் பாடுவதும் கூடி மகிழ்வதும் மழலைக் குழந்தைகளின் இயல்பு. கணங்கள் தோறும் பற்பல எண்ணற்ற முயற்சிகளில் ஈடுபட்டு உருளுவதும் புரளுவதும் கலைகள் பயில்வதும் விளையாடுவதும் மழலைக் குழந்தைகளின் அன்றாடக் கருமங்களாகும். மழலைக்களின் ஆனந்தக் களிப்பில் அதன் சுழிப்புக்களின் அவதானிப்பில் கவிஞர் யானைத் தாத்தா தேவன்பூதனார் அகமகிழ்ந்து வரைந்த வரிகளில் "சாதனா ஆடுறா" என்ற மழலைகளுக்கான நூலை யாத்துள்ளார். இந்நூலுக்கான வடிவமைப்பு வண்ணங்களில் பஞ்ச வர்ணங்களைத் குழைத்து இந்நூலை அழகுற ஆக்கியுள்ளார் ஜீவநதி க.பரணீதரன் அவர்கள். கவிஞர் யானைத்தாத்தா தேவன்பூதனாருக்கும் ஜீவநதி க.பரணீதரன் அவர்களுக்கும் வாசகர்களுக்கும் மழலைகள் முத்தமழை பொழிந்து நன்றி கூறுவர் என நாம் நம்பலாம்.


சோ.தேவராஜா
கலாலயம் பதிப்பகம்
2023.07.13

புத்தகப் பண்பாட்டுப் பேரவை
இல. 68, நீதிமன்ற வீதி,
மல்லாகம்.



வெளியீடு : ஜீவநதி & கலாலயம் பதிப்பகம்
முதற்பதிப்பு 2023 ஆடி
விலை : 250.00
பக்கம் : 10
ISBN : 978-955-0958-07-8

ஜீவநதி வெளியீடு - 286 கலாலயம் பதிப்பகம் - 6






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனா பாடுறா
ஸரிகம பாடுறா
சாதனா ஆடுறா
சாய்ஞ்சு சாய்ஞ்சு ஆடுறா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனா ஓடுறா
கூடி விளையாடுறா
சுத்திச் சுத்தி ஓடுறா
சுழண்டு சுழண்டு ஆடுறா








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுக்கிறா எழும்புறா
பல்லுத் தேய்த்துக் குளிக்கிறா
உடுப்பை எடுத்து பாக்கிறா
தானே போட்டுக் கொள்ளுறா







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டுப்பாடி நடிக்கிறா
பாடம் கேட்டுப் படிக்கிறா
குயில் கூவ கேட்கிறா
கூ... கூ... எனக் கூவுறா







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூனையோடை பழகுறா
மியாவ்... மியாவ்... என்கிறா
நாயைக் கண்டு நடிக்கிறா
வள்... வள்... எனக் குரைக்கிறா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சேவல் கூவக் காணுறா
கொக்கரக்கோ என்னுறா
ஆட்டுக் குட்டியை அணைக்கிறா
மெஞ்ஞா... மெஞ்ஞா... என்கிறா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மாட்டுக் கன்றோட துள்ளுறா
ம்ம்பா... ம்ம்பா... கத்துறா
வீட்டில் குடும்ப ராணியாகி
வீதி உலா வருகிறா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



978-955-0958-07-8
250.00
978-955-0958-07-8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org